28th September 1961]

Fertilizers (complaint about distribution).

* 1890-L Q.—SRI V. SUBBIAH : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் அமோனியம் சல்பேட், உரியா முதலியன விநியோகித்தல் சம்பந்தமாய் கோயில்பட்டி, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சங்கரன்கோயில் வட்டம் ரயத்துக்களிடமிருந்து புகார் ஏதேனும் வந்ததா ?

(இ) அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. Only one specific complaint about shortage in weight in the stocks of fertilizers sold by the Veerasigamani Multi-purpose Co-operative Society was received.

(*b*) The complaint was enquired into and the enquiry revealed that there was truth in the allegation. The retail distribution of fertilisers for the area has therefore been entrusted to another Co-operative Society, viz., Madathupatti Multi-purpose Co-operative Society.

SRI V. SUBBIAH : இம்மாதிரியான புகார்களில் எவ்வளவு பேர்களைப்பற்றி ஆலோசனைகள் நடத்தப்பட்டிருக்கிறது? எவ்வளவு பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது குறிப்பிட்ட கேள்வி கோயில்பட்டி சங்கரன்கோயில் தாலூகா சம்பந்தப்பட்ட ஒன்றைத்தவிர வேறு அல்ல. அதற்கு அதன் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னேன். வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

Loans for purchase of fertilizers

* 1890-M *Q.*—SRI V. SUBBIAH : Will the Hon. the Minister for Home be pleased to state how many ryots were granted special loans, district-war, under the Intensive Manuring Scheme for the purchase of fertilizers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A paper [a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : விவசாய உற்பத்தியில் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்ததாக வட ஆற்காடு மாவட்டம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்களே சொல்கிறார்கள். ஆனால், மேஜை மீது வைக்கப்பட்ட விவரத்தில், வட ஆற்காடு மாவட்டத்திற்குத்தான் மிக மிகக் குறைந்த அளவு கடன்கள் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. உரத்திற்கான மனுக்கள் அங்கே ஏராளமாகக் கொடுக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குக் கடன் கொடுக்கிற அளவு நிலைமை இல்லை. இதற்குக் காரணம் என்ன ? வட ஆற்காடு மாவட்டத்தில் அதிகமான அளவுக்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த "இன்டென்ஸீவ் மென்யூரிங் ஸ்கீம்" படி கடன் கொடுப்பதற்குச் சில விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி கடன் கொடுக்கப்படுகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் இந்தக் கடன் கொடுக்கக் கூடாது என்ற பாரபட்சம் ஒன்றும் இல்லை.

---

[a] Printed as Appendix VII on pages 309–310 infra.